**வாக்குமூலம்**

**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**

**M.C.O.P.No.284/2022**

**வழக்கு சாட்சி P.W.1**

**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திரு.K.கார்த்திக் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கருப்புச்சாமி | தொழில் | : செங்கல் சூலை உரிமையாளர் |
| தகப்பனார் பெயர் | : பழனிச்சாமி | கணவர் பெயர் | : ---- |
| கிராமம் | : நாச்சிமுத்து புதுார் | வயது | : சுமார் 61 |
| தாலுக்கா | : தாராபுரம் | நாள் | : 15.04.2026 |
| மாவட்டம் | : திருப்பூர் | | |

<u>1–ம் எதிர்மனுதாரர் தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை</u>

எனது வாகனம் மாருதி சிப்ட் கார் என்றால் ? சரிதான். எனது காரின் பதிவு எண். TN 38 AZ 9121 என்றால் ? சரிதான். அந்த வாகனத்தின் உரிமையாளர் நான் தான். அந்த வாகனத்திற்கு விபத்து சமயத்தில் காப்பீடு இருந்தது என்றால் ? சரிதான். நான் தாக்கல் செய்துள்ள மனுவில் வாகனத்தின் உரிமையாளரையும், எனது வாகனத்தின் காப்பீடு நிறுவனத்தையும் தரப்பினராக சேர்த்துள்ளேனா என்றால் ? சேர்த்துள்ளேன். நான் சொல்வது தவறு என்றாலும், உரிமையாளரையும், எனது காரின் இன்சூரன்ஸ் நிறுவனத்தையும் வழக்கில் தரப்பினராக சேர்க்காமல் சேர்த்ததாக வழக்கிற்காக வேண்டி பொய்யாக சொல்கிறேன் என்றால் ? சரியல்ல. எனது வாகனத்தின் உரிமையாளரையும், இன்சூரன்ஸ் நிறுவனத்தையும் இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்காத காரணத்தினால் நான் தாக்கல் செய்துள்ள மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் ? சரியல்ல. விபத்து சமயத்தில் எனது வாகனமான மாருதி சிப்ட் காரை நான் தான் ஓட்டி வந்தேன் என்றால் ? சரிதான். எனது காரினை நானே ஓட்டி சென்றுள்ள நிலையில் மோட்டார் வாகன இழப்பீடு கோரும் சட்டம் பிரிவு 166ன்

கீழ் நான் மனு தாக்கல் செய்ய இயலாது என்றால் ? சரியல்ல. நான் சட்டப்பிரிவு 163(A)ன் கீழாக தான் மனுவினை தாக்கல்செய்ய இயலும் என்றால் ? சரியல்ல. எனது தரப்பு சாட்சியத்தின் போது நான் சம்பவ இடத்தினை குறித்துள்ள புலன் விசாரணை அதிகாரியின் மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ? தாக்கல் செய்துள்ளேன். சாட்சியானவர் விபத்தானது குறுக்கு சாலையில் ஏற்பட்டது என்றும், போலிசார் மாதிரி வரைபடத்தை 50 அடி தள்ளி விபத்து ஏற்பட்ட இடம் என்று குறியீடு செய்துள்ளார்கள். 1–ம் எதிர்மனுதாரரின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை தாக்கல் செய்துள்ளேனா என்றால் ? இல்லை. என்னுடைய வாகனத்திற்கு முன் பகுதியில் முழுவதும் சேதாரம் ஏற்பட்டுள்ளது என்றால் ? எனது காரின் மையப்பகுதியில் வாகனம் மோதியதால் நான் ஓட்டிச் சென்ற வாகனம் டிவைடரில் சென்று மோதியதால் முன்பக்கம் சேதம் ஏற்பட்டது. நான் 10–ம் வகுப்பு வரை படித்துள்ளேன். மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையில் வாகனத்தின் நடுப்பகுதியில் சேதம் ஏற்பட்டதாக குறிப்பிட்டுள்ளாரா என்றால் ? என்னிடம் காட்டப்படும் ஆவணம் ஆங்கிலத்தில் உள்ளதால் என்னால் ஆங்கிலத்தில் உள்ளதை சொல்ல இயலவில்லை. நான் சொல்வது தவறு என்றாலும், மாருதி சிப்ட் காரின் நடுப்பகுதியில் எந்தவித சேதமும் ஏற்படவில்லை என்றாலும் ? சரியல்ல. எனது வாகனம் டிவைடரில் மோதி விபத்து ஏற்பட்டதாக நான் சொல்லியுள்ள சங்கதியை நான் கொடுத்த புகார் மனுவில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் ? அந்த நேரத்தில் நான் தெளிவாக பேசக்கூடிய மனநிலையில் இல்லை. புகாரினை நான் தான் கொடுத்தேன். புகார் மனுவில் என்ன எழுதப்பட்டது என்ற விபரம் இன்று வரை எனக்கு தெரியாது என்றால் ? உண்மை தான். நான் டிவைடரில் மோதிவிட்டு லாரி மீது பொய்யான வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் ? சரியல்ல. இவ்வழக்கை பொறுத்து 1–வது எதிர்மனுதாரர் வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை, மாதிரி வரைபடம், பார்வை மகஜர் ஆகியவைகளில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள்

எனக்கு எதிராக இருந்த காரணத்தினால் தான் இவ்வழக்கில் குறியீடு செய்யப்படவில்லை என்றால் ? சரியல்ல. இந்த விபத்தானது 2–வது எதிர்மனுதாரரின் கவனக்குறைவால் ஏற்படவில்லை என்றாலும், எனது கவனக்குறைவால் ஏற்பட்டது என்றாலும் ? சரியல்ல. நான் என்ன வேலை பார்த்தேன் வந்தேன் என்றால் ? செங்கல் சூளை வைத்துள்ளேன். அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் ? தாக்கல் செய்துள்ளேன். நான் செங்கல் சூளை நடத்தவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன்என்றால் ? சரியல்ல. செங்கல் சூளையானது விபத்து ஏற்பட்ட காலத்திற்கு பிறகும் தொடர்ந்து நடந்து கொண்டு தான் இருந்தது என்றாலும் ? செங்கல் சூளையினை நான் சென்று சரியாக நிர்ணயிக்கமுடியவில்லை. நான் நீதிமன்றத்திற்கு நானாகவே தான் நடந்து வந்தேன் என்றால் ? சரிதான். எனக்கு நுரையீரல் பிரச்சனை சம்மந்தமாக பிரச்சனை உள்ளதா என்றால் ? விபத்திற்கு பிறகு எனக்கு நுரையீரல் பிரச்சனை உள்ளது. எனக்கு ஏற்பட்ட காயங்கள் சரியாகிவிட்டது என்றால் ? சரியல்ல. எதிர்கால மருத்துவ செலவுகள் நான் கோரியுள்ள நிலையில் அதற்கான சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ? தாக்கல் செய்துள்ளேன். 1–வது எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க வேண்டியது இல்லை என்றாலும், விபத்திற்கு நான் தான் காரணம் என்றாலும் ? அது தவறு. நான் கோரியுள்ள இழப்பீட்டு தொகை அதிகம் என்றால் ? சரியல்ல. நான் ஓட்டிச் சென்ற காரின் இன்சூரன்ஸ் நிறுவனத்தை இவ்வழக்கில்தரப்பினராக சேர்க்காத காரணத்தினால் நான் தாக்கல் செய்துள்ள மனு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் ? சரியல்ல.

**<u>நீதிமன்ற கேள்வி</u>**

எனக்கு ஏற்பட்ட காயங்களுக்காக நான் மருத்துவ குழு முன்பு முன்னிலையாகியுள்ளேன் என்றால் ? சரிதான். மருத்துவ குழுவினர் என்னை பரிசோதித்து விட்டு 35% (Disability Certificate) எனக்கு ஏற்பட்ட காயங்களினால்

இயலாமை ஏற்பட்டுள்ளது என்று இயலாமை சான்று வழங்கியுள்ளார்கள் என்றால் ? சரிதான். **மேற்படி இயலாமை சான்றிதழ் நீ.ம.சா.ஆ.1.**

**1—வது எதிர்மனுதாரர் தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை**

**இல்லை.**

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2026.04.15 16:52:10 +0530

சார்பு நீதிபதி
ஒட்டன்சத்திரம்